**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**

**O.S. 168/2022**

**நாள். 09.2.2026.**

**வா.சா.1- வீராச்சாமி த/பெ.ரெங்கசாமி**

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. தாவா வழக்கை 6 அயிட்ட சொத்துகளுக்காக தாக்கல் செய்துள்ளேன். உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா வழக்கின் பிரச்சனை 6 அயிட்ட சொத்துகளுக்காகவும் உள்ளது.

2. வாதிகளுக்கும் பிரதிவாதிகளுக்கும் 6 அயிட்ட சொத்துகளுக்காக பிரச்சனை இல்லையென்றாலும், 1வது அயிட்ட சொத்துக்கு மட்டும் தான் பிரச்சனை என்றால் சரியல்ல. சர்வே எண்.537/2 க்கு கட்டுப்பட்ட நிலத்தின் மொத்த விஸ்தீரணம் 3 ஏக்கர் 39 ஆகும். அதில் சர்வே எண்.537/2 A க்கு கட்டுப்பட்ட நிலத்தின் மொத்த விஸ்தீரணம் 80 செண்ட் ஆகும். மேற்படி சர்வே எண்.537/2A க்கு கட்டுப்பட்ட சொத்து வழக்கின் 1வது அயிட்ட சொத்து என்றால் சரிதான். தாவா 1வது அயிட்ட சொத்திற்கு தெற்கு பக்கத்தில் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது. பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட நிலத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் சர்வே எண் தெரியாது, 3 ஏக்கர் 39 செண்டில் எனக்கு பாத்தியப்பட்ட 80 செண்ட் நிலம் போக மீதமுள்ளவை பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது.

3. சர்வே எண்.537/2A க்குரிய பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் பிரதிவாதிகளான ராஜேஸ்வரி, சிவக்குமார் ஆகியோரோடு வெள்ளைச்சாமியின் மகன் ஆறுமுகம் பெயரை சேர்த்து கூட்டுப்பட்டாவாக உள்ளது. எனக்கு பாத்தியப்பட்ட 80 செண்ட் நிலத்தை கூட்டுப்பட்டாவிலிருந்து தனித்து பிரித்து பட்டா பெறுவதற்காக வருவாய் துறை ஆவணங்கள் மூலம் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை.

4. கூட்டுப்பட்டாவில் பிரதிவாதிகளின் பெயரில் எந்த ஆண்டு முதல் உள்ளது

என்றால் 2022 ம் ஆண்டு சொத்து வாங்கியதிலிருந்து உள்ளது. எங்களுக்கும், பிரதிவாதிகளுக்கும் பொழிமால் சம்மந்தமாகதான் பிரச்சனை என்றால் இடைஞ்சலும் செய்து வருகிறார்கள். பொழிமாலிருந்த உயிர்வேலி முள்ளை எடுத்துவிட்டார்கள். பொழிமால் சம்மந்தமாக பிரச்சனை. சர்வே எண்.537/2 யை பிரிப்பதற்கு பிரதிவாதிகளோ, நாங்களோ சர்வேயர் மூலம் நடவடிக்கை எடுத்தோமா என்றால் இல்லை.

5. பிரதிவாதிகள் மூன்று முறை இடத்தை அளப்பதற்கு படிகட்டி எங்களுக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டு அளந்தார்கள் என்றால் சரியல்ல. 3.10.2022 ம் தேதி இடத்தை அளப்பது சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டு வேடசந்தூர் காவல் நிலையத்தில் பிரதிவாதிகள் எங்கள் மீது புகார் கொடுத்தார்கள் என்றால் இல்லை. பிரதிவாதிகள் கொடுத்த புகார் மனுவிற்கு CSR 659/2022 வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது.

6. இடத்தை அளப்பது சம்மந்தமாக மாண்பமை உயர்நீதிமன்றத்தில் பிரதிவாதிகள் மனு செய்து அளிக்கப்பட்ட உத்தரவின்பேரில் வட்டாட்சியர், நிலஅளவையர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் காவல் ஆய்வாளர் ஆகியோருடன் எங்களுக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டு இடத்தை அளந்தார்கள் என்றால் இல்லை. இடத்தை அளக்கும்போது நான் உடனிருந்தேன் என்றால் இருந்தேன், ஆனால் எங்களின் அனுமதின்பேரில் அளக்கவில்லை, எங்கள் இடத்திற்குள் வந்து இடைஞ்சல் செய்தார்.

7. இடத்தை அளக்கும்போது யார் இடைஞ்சல் செய்தார்கள் என்றால் பிரதிவாதிகள் தரப்பினர்கள் இடைஞ்சல் செய்தார்கள். இடத்தை அளக்கும்போது வீடியோ பதிவு செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வீடியோ பதிவு செய்யப்பட்டது என்றாலும் அந்த பதிவில் நானும் இருக்கிறேன் என்றாலும் எனக்கு அது பற்றி தெரியாது.

8. இடத்தை அளந்த நாளன்று சர்வேக்கல் ஊன்றப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சர்வேக்கல் ஊன்றப்பட்ட இடத்தில் தற்போது எந்த நிலை உள்ளது என்றால் வேலி அமைத்துள்ளார்கள். எனக்கு இடத்தை அளவு செய்ததில்

ஆட்சேபனை உள்ளது என்றால் சரிதான்.

9. இடத்தை அளந்தது சம்மந்தமாக ஆட்சேபனை தெரிவிப்பதற்கோ அல்லது இவ்வழக்கில் இடத்தை அளப்பதற்கு நடவடிக்கையோ எடுத்தேனா என்றால் இல்லை. அப்படியெனில் ஏற்கனவே தாவா இடம் சம்மந்தமாக அளந்துள்ளதை ஒப்புக்கொள்கிறேன் என்றால் சரியல்ல.

10. வருவாய்துறை அதிகாரிகள் முன்பு தாவா இடத்தை அளந்து மால்செய்து சர்வேக்கல் ஊன்றப்பட்டு பிரச்சனை முடிவு செய்யப்பட்டது என்றாலும், பிரதிவாதிகளுக்கு எதிராக வீண் வழக்கு தாக்கல் செய்து நடத்தி வருகிறேன் என்றாலும் சரியல்ல. சர்வே எண்.537/2A ல் 1ம் பிரதிவாதி ராஜேஸ்வரிக்கும் பங்கு இருப்பதால் அவருக்கு மோசம் செய்ய வேண்டி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

B.Peter Digitally signed by B.Peter Date: 2026.02.10 19:14:28 +0530

**Principal District Munsif**
**Vedasandur**